**வணிக வழக்குக்கான சார்பு நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No. 250 Of 2024

2025 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 19- வது நாள் வியாழக்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.சி.பி.வேதகிரி.,பி.பார்ம்.,எம்எஸ்-ஐடி(ஆஸ்திரேலியா).,எல்எல்எம்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. K. சீனிவாசகபெருமாள் | கிராமம்: | |
| க.பெ. (அ)<br>த.பெ. | திரு. கிருஷ்ணசாமி | வேலை: | Business Head OEM,<br>(General Manager)<br>M/s. Glosil International<br>Private Limited. |
| வயது | 52 | செல்போன் எண் | |

வா.சா.1 **திரு. K. சீனிவாசகபெருமாள்** ஆக 19.06.2025 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

**1. 30.05.2014 –** எங்கள் நிறுவனத்தின் பதிவு சான்று - நகல் – **Ex.A1** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**2. 28.07.2023 –** இயக்குநர் குழுவின் தீர்மான கடிதம் - அசல் – **Ex.A2** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**3.** இன்வாய்ஸ்களின் எண்ணிக்கை - 7 **– Ex.A3** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**4. 01.04.2018 – 31.03.2023 –** பிரதிவாதிகளுடனான வியாபார கணக்குப்பட்டியல் - நகல் – **Ex.A4** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.** பிரதிவாதியுடனான இமெயில் உரையாடல் கணினியில் பெறப்பட்டது – **Ex.A5** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**6. 09.05.2023 –** எனது தரப்பில் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் அலுவலக நகல் – **Ex.A6** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**7. 15.05.2023 –** 1ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை - அசல் – **Ex.A7** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**8. 15.05.2023 – 2**ம் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை - அசல் – **Ex.A8** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**9. 17.06.2023 –** பிரதிவாதிகள் தரப்பில் அனுப்பிய அஞ்சல் உறையுடன் கூடிய பதிலறிவிப்பு - அசல் – **Ex.A9** ஆக குறியீடு செய்யப்பட்டது.

**10. 30.01.2024 –** சமரச மையம் வழங்கிய அறிக்கை - அசல் – **Ex.A10** ஆக குறியீடு செய்யப்பட்டது.

பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ 5 வரை ஆவணங்களை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி நிறுவனத்துடன் உண்டான அனைத்து வியாபார விபரங்களும் உங்களுக்கு நன்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி நிறுவனம் உங்கள் நிறுவனத்தின் Distributor ஆ என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனம் எங்கள் நிறுவனத்தின் Customer ஆவார். Distributor ஆக Appoint செய்யப்பட்டால் அவரைத் தவிர வேறு யாரும் அந்த பகுதியில் குறிப்பிட்ட நிறுவனத்தின் பொருளை விற்க முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்திற்கு Auto spare parts விற்கும் தனிப்பட்ட கடை கிடையாது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. உங்கள் நிறுவனத்தின் ஊழியரான ஜோஸ் டானியல் மற்றும் பிரதிவாதி நிறுவனத்தின் ஊழியரும் சேர்ந்து உங்கள் நிறுவன பொருட்களுக்கு Retail outlet களிடம் ஆர்டர் எடுப்பது வழக்கம் என்றால் சரியல்ல, ஆர்டர் எடுப்பது எங்கள் நிறுவனத்தின் வேலை அல்ல. பொருட்களின் எதிர்கால பலன் பற்றி நாங்கள் கூறுவது வழக்கம்.

பிரதிவாதி நிறுவனத்திற்கு மாதமொரு முறை நீங்கள் Stock அனுப்புவது வழக்கம் என்றால் பிரதிவாதி நிறுவனம் கேட்பதன் பேரில் Stock அனுப்பப்படும். அவ்வாறு ஆர்டர் எடுப்பதன் பேரில் பிரதிவாதி நிறுவனத்திடம் உள்ள Stock ல் இருந்து சப்ளை செய்யப்படுவது வழக்கம் என்றால் சரிதான். பிரதிவாதி நிறுவனத்துடன் சென்று ஆர்டர் எடுக்கப்படும் கடைகளில் நீங்கள் தனிப்பட்ட முறையில் ஆர்டர் எடுக்கக்கூடாது என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனம் ஆர்டர் எடுத்த கடையகளில் அவருக்கு தெரியாமல் நீங்கள் தனிப்பட்ட ஆர்டர் எடுத்தால்தான் உங்களுக்கும் பிரதிவாதி நிறுவனத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அப்படி இல்லை சரிபார்த்து தான் சொல்ல வேண்டும். பிரதிவாதிக்கு திருநெல்வேலி, கன்னியாகுமரி, விருது நகர், சென்னை ஆகிய நான்கு மாவட்டங்களில் வாதி நிறுவனத்தின் Distributorship கொடுக்கப்பட்டும் அதே 4 இடங்களில் நீங்கள் தனிப்பட்ட முறையில் ஆர்டா் மற்றும் சேல்ஸ் செய்துள்ளீரகள் என்றால் சரியல்ல, வாடிக்கையாளர்கள் எங்களிடம் நேரடியாக தொடர்பு கொண்டு பொருட்களை கேட்டால் நாங்கள் கொடுப்பது வழக்கம். **வா.சா. ஆ. 4 ல்** வியாபார கணக்குப்பட்டியலில் Distributor Incentive /April 2019 to June 2019 / Chennai மற்றும் Distributor Incentive /April 2019 to June 2019 / Virudhunagar, For Distributor Incentive July to Sep 2020, Payable Distributor Incentive July to Sep 2020, Payable Distributor Incentive October to December 2020, Payable Distributor Incentive January to Mar 2021, Payable Distributor Incentive October to December 2021 என கண்டுள்ளது என்றால் சரிதான். Incentive கொடுக்கப்பட்டது சரிதான். ஆனால் Distributor என தவறாக Finance Department ல் Statement கொடுக்கப்பட்டுள்ளது. பிரதிவாதி எங்கள் Customer தான். உங்கள் நிறுவனத்தின் குறிப்பிட்ட காலகட்டத்தின் மொத்த Account Transaction விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். உங்கள் நிறுவனத்தின் Executive Director பெயர் என்ன என்றால் திரு. கோகுல் ஆவார். அவருடைய கையொப்பம் உங்களுக்கு தெரியுமா என்றால் பார்த்து தான் சொல்ல இயலும். Incentive தொகையை உயர்த்துவதற்கோ அல்லது குறைப்பதற்கோ Executive Director அவருக்கு தான் அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தீர்மானத்தில் Executive Director அவர்களின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான், M D கையொப்பம் இட்டு உள்ளார். உங்கள் நிறுவனத்தின் அன்றாட விவரங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் பற்றி உங்களுக்கு தெரியவில்லை என்ற காரணத்தினால் உங்களது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 கணக்குப்பட்டியல் 01.04.2018 முதல் 31.03.2023 வரை உள்ள வியாபார விவரங்கள் சம்பந்தமானது என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தின் கணக்கு வழக்குகளுக்கு வருடாவருடம் தணிக்கை செய்யப்பட்டு வருமான வரி தாக்கல் செய்யப்படும் என்று சொன்னால் சரிதான். கணக்கு தணிக்கை செய்யப்பட்ட சமயத்தில் நீங்களோ அல்லது உங்கள் Finance Department லோ பிரதிவாதி நிறுவனம் சார்பாக Distributor Incentive என குறிப்பிடப்பட்ட விசயத்தை தவறு என சுட்டிக்காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 மின்னஞ்சல் ஆவணம் எந்த கணினியில் இருந்து எடுக்கப்பட்டது, யார் அதன் உரிமையாளர், எந்த நேரத்தில், எந்த தேதியில் மேற்படி ஆவணம் எடுக்கப்பட்டது என்ற விவரம் சொல்லப்படாத காரணத்தினால் வா.சா.ஆ.5 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று சொல்லப்பட்டால் சரியல்ல. **வா.சா.ஆ.4 ல்** வேறு நிறுவனங்களான Karunya Motors, Shree Malathi Auto போன்ற நிறுவனங்கள் பெயர் எதற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிபார்த்து தான் சொல்ல இயலும். திரு. ஜோஸ் டானியல் என்பவர் தற்சமயம் உங்கள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் நிறுவனம் சார்பாக திரு. ஜோஸ் டானியலும் பிரதிவாதி நிறுவன ஊழியர் சென்று சப்ளை செய்யும் பொருட்களுக்கு திரு. ஜோஸ்

டானியல் தான் பணம் வசூல் செய்து, பிரதிவாதி நிறுவனத்தின் பெயரில் உள்ள ரசீதை வாடிக்கையாளர்களுக்கு கொடுப்பார் என்றால் எனக்கு தெரிந்த வரை அப்படி கொடுக்கும் வழக்கம் எங்கள் நிறுவனத்திற்கு கிடையாது, எங்களது ஊழியரை கேட்டு

தான் சொல்ல இயலும். பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் Distributorship தான் கொடுத்து உள்ளீர்கள், அதை மறைப்பதற்காகத்தான் தற்சமயம் பொய் சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. திரு. ஜோஸ் டானியல் என்பவரை விசாரித்தால் பிரதிவாதி நிறுவனத்தின் பெயரில் அவர் ரசீது போட்டு கொடுத்த விவரம் தெரிந்துவிடும் என்ற காரணத்தினால் தான் அவரை உங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி நிறுவனத்திற்கு நீங்கள் Distributorship கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில் பிரதிவாதி செய்த வியாபாரத்திற்கு Incentive ஆக ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் தரவேண்டி உள்ளது, அதை மறைத்தும் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் தான் இந்த வழக்கு பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்கள் நிறுவனத்தின் ED ஆன திரு. கோகுல், நீங்கள் மற்றும் ஊழியரான திரு. ஜோஸ் டானியல் ஆகியோர் பிரதிவாதிக்கு சேரவேண்டிய Incentive தொகையை தருவதாக சொல்லி காலம் தாழ்த்தி வருகிறீர்கள் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு சொல்லவில்லை. எங்களுக்கு Distributorship கொடுக்கப்பட்டும், அதன் நிபந்தனைகளுக்கு விரோதமாக Selves two wheeler spares, Thisayanvilai, Mario car Jewels, Nagercovil, 7 Cars, Sivakasi, Mukesh Motor , Sivakasi, Aathithiya car Jewels, Tirunelvelk, Azhagumalaiam Auto, Thirunelveli, Rehoboth vehicle (Honda), Tirunelveli, Venkateshwara auto stores, Palaymakottai ஆகிய நிறுவனங்களுக்கு நேரடியாக பொருட்களை வாதி நிறுவனம் சப்ளை செய்ததற்கான Incentive தொகையை வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தெரிந்து மேற்படி நிறுவனங்களுக்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் சப்ளை செய்துள்ளீர்கள், எங்களுக்கு தெரியாமல் வேறு நிறுவனங்களுக்கும் சப்ளை செய்யப்பட்டிருக்கும் பொருட்களுக்கு கணக்குப்பார்த்து அதற்குண்டான Incentive தொகையை வாதி நிறுவனம் பிரதிவாதிக்கு கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. அதனால் தான் மேற்படி பகுதிக்கு உட்பட்ட சப்ளைகளின் அனைத்து statement of account ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் பிரதிவாதி நிறுவனத்தின் Account ஐ மட்டும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் ஊழியர் பிரதிவாதி நிறுவன ஊழியருடன் சப்ளை செய்த பொருட்களுக்க உண்டான தொகையை உங்கள் ஊழியர் பெற்று கொண்டுவிட்ட விதத்தில் பிரதிவாதி நிறுவனத்திற்கு ரூபாய் 1,55,792/- வாதி நிறுவனம் சேர்க்க வேண்டும் என்றால் சரியல்ல. வாதி நிறுவனத்திற்கு பிரதிவாதி நிறுவனம் எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை, தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI

Digitally signed by CONJEEVARAM BALASUBRAMANIAN VEDAGIRI
Date: 2025.06.19 17:40:49 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.